# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்




வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701**

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


1. மானிடத்தில் மாபெரும் தவறு 1
2. நிச்சயமாய் நடக்கக்கூடியவைகள் 5
3. ஒரு நல்ல மனைவியாக இருப்பது எப்படி? 9
4. அரசு வருகிறதா 12
5. தேவனின் கரங்களை மட்டுப்படுத்தாதீர்! 14
6. நான் ஏன் பிறந்தேன் 21
7. நேற்று இன்று நாளை 27
8. மனிதன் பாவத்தில் பிறக்கிறானா? 28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 7 JUNE 1994 Issue - 6


## ஆசிரியவுரை

## "மானிடத்தின் மாபெரும் தவறு"

மனிதன் தவறு செய்வதென்பது, ஏதோ இந்த இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்டுவிட்ட ஒரு விபத்து அல்ல. பிதாவாகிய தேவனால் மானிடம் சிருஷ்டிக்கப்பட்டு, ஏதேன் தோட்டத்தில் அவனை குடியமர்த்தினதிலிருந்தே தொடர்ந்து வருகின்ற ஒரு முடிவற்ற செயல் தான் தவறு என்பது. அன்று, சத்துருவாகிய சாத்தானின் வஞ்சக வார்த்தைகளால் கீழ்ப்படியாமை என்கிற விஷ விதை விதைக்கப்பட்டு, ஏவாள், ஆதாம் இவர்கள் மூலம் நீர் பாய்ச்சப்பட்டு, தொடர்ந்து வந்த நமது முன்னோர்களால் உரமிடப்பட்டு, கண்ணும் கருத்துமாக, காலம் காலமாக பராமரிக்கப்பட்டு வரும் இந்த நச்சு மரம், இன்று மாபெரும் விருட்சமாக வளர்ந்து மானிடத்தை அலைக்கழித்துக் கொண்டுள்ளது. இந்த விருட்சத்தின் கீழாக சுகமாக இளைப்பாறிக் கொண்டிருக்கும் மானிடம், இந்த விருட்சம் எவ்வளவு அழகாக, சௌகரியமாக இருக்கிறது என்று பாராட்டுமளவிற்கு நிலமை உள்ளது. இந்த நச்சு மரத்தின் சுகத்தை அனுபவிக்காத மனிதன் ஒருவனும் இல்லை. இந்த அவல நிலையைத் தான் பவுலடியார், "எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி" என்று சொல்லுகிறார். (ரோம 3 : 23).

மானிடத்தின் இந்த தவறுகளுக்கெல்லாம், சிகரமாக இருப்பது, "ஆவிக்குரிய காரியங்களுக்கு, சரீரப் பிரகாரமான பொருள்" எடுத்துக் கொள்வது தான். ஏன், இது மாபெரும் தவறு எனில் இதன் விளைவு அதி பயங்கரமானது. தேவனால் மனிதன் படைக்கப்பட்ட நோக்கத்தையே சிதைத்து, சின்னாபின்னமாக்குவது.

ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ள முடியாமல், மானிடம் எங்கெல்லாம் தவறிழைத்திருக்கிறது என்பதை வேதத்தின் வெளிச்சத்தில் சிலவற்றை ஆராய்ந்து பார்ப்போம்.

## யூதர்கள் ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்து கொள்ளவில்லை : (யோவான் 2:18-22)

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக, நம்மைப் போல் ஒரு மனிதராய், நமதாண்டவர் நன்மை செய்கிறவராய் இப்பூவுலகில் சுற்றித் திரிந்து, ஊழியம் செய்த நாட்களில், யூதமக்கள் ஆண்டவரின் அருளுரையை புரிந்து கொள்ள மிகவும் சிரமப்பட்டனர். ஏன், புரிந்து கொள்ளவேயில்லை என்று சொன்னாலும் தவறில்லை, புரிந்து கொண்டிருந்தால்" பாவம் அறியாத இயேசுவை சிலுவையில் அறையும்'' என்றும்,''பாதகன் பரபாசை விடுதலை செய்யும். என்றும் ஏக சத்தமாய் கூக்குரலிட்டிருப்பார்களா?

ஒரு முறை கிறிஸ்துவானவர், பஸ்கா பண்டிகை சமீபித்திருந்த நாட்களில், எருசலேம் பட்டணத்தில், யூத மக்களால் போற்றப்பட்டு வந்த புகழ்மிக்க தேவாலயத்தைக் குறித்து, "இந்த ஆலயத்தை இடித்து போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்"என்றார். (யோவா 2:19). அப்பொழுது அங்கு கூடியிருந்த யூதர்கள் அதிர்ச்சியடைந்து, இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருடம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ? என்றார்கள்.

ஆனால் இயேசுவோ, அங்கே தன்னுடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார். மாத்திரமல்ல, தன்னுடைய உயிர்த்தெழுதலைக் குறித்து அங்கே முன்னறிவிக்கிறார். மோசேயின் பிரமாணத்தை முறையாகக் கற்றவர்கள், தீர்க்க தரிசனங்களை அறிந்தவர்கள், கிறிஸ்துவானவர் பேச்சின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாமல் தவறு செய்கிறார்கள் என்னே பரிதாபம்!

## சீடர்கள் ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ளவில்லை (மத் 17 : 1 -8)

நமதாண்டவர் பரம் ஏறுவதற்கு, சரியாக ஒரு வருடம் முன்னதாக, தனக்கு நெருக்கமான சீடர்களாகிய பேதுரு, யோவான், யாக்கோபு இவர்களை அழைத்துக் கொண்டு, மறு ரூபம் அடைந்த மலை என்று நம்பப்படுகின்ற எர்மோனுக்கு செல்கிறார். அங்கே சீடர்கள் கண்ட காட்சி அவர்களை பிரமிக்க வைத்தது. மோசேயும், எலியாவும் இயேசுவோடு பேசிக் கொண்டிருந்ததைக் கண்டார்கள். எப்போதும் அவசரகோலத்தில் செயல்படும் பேதுரு, "அங்கே தானே கூடாரம் போடலாம்" என்கிறார். அதுவும் எப்படி மூன்று பேருக்கும் மூன்று கூடாரமாம்.

ஆண்டவராகிய இயேசுவின் மீது வைத்த அபார பக்தியினால் தான், பேதுரு அப்படிச் சொன்னார் என்று நாமறிவோம். ஆனால் மறுரூப மலையில் கூடாரவாசியாவதற்கா பரலோகம் விட்டு பூலோகம்

வந்தார்? மறுரூபமாகி வெளிப்படுத்தின காட்சி பேதுருவால் கூடாரம் போடுவதற்கா? இல்லை இல்லவே இல்லை. அங்கே புதைந்து கிடந்த ஆவிக்குரிய காரியங்கள் ஆண்டவருக்கு நெருக்கமாக இருந்த இவர்களுக்கு ஏன் விளங்காமல் போனது. காலமெல்லாம் கூட இருந்து போதனை கேட்டவர்களல்லவா இவர்கள். ஆச்சரியம்!சரீர கண்ணோட்டம் மேலோங்கி இருந்தது? தான் இதற்குக் காரணம்.

நண்பரே, **பக்தியின் மிகுதியால்** நாம் தவறு செய்தாலும் தவறு, தவறுதான் என்பதை மறந்து விட வேண்டாம்.

சரி, இங்கே என்ன ஆவிக்குரிய அர்த்தம் உள்ளது என்கிறீர்களா? மறுரூப மலையில் ஆண்டவரோடு மோசேயும், எலியாவும் காட்சி தருகிறார்கள். மோசே நியாயப் பிரமாணத்தின் தந்தை. எலியா தீர்க்கதரிசிகளில் மகா தீர்க்கன், பிரமாணங்களின் பிரதிநிதி மோசே. தீர்க்கதரிசனங்களின் பிரதிநிதி எலியா. இருவரும் கிறிஸ்துவுடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒளியுள்ள மேகம் அவர்கள் மேல் நிழலிடுகிறது. அந்த மேகத்திலிருந்து சத்தம் உண்டாகிறது. “இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்கு செவி கொடுங்கள்'' என்று, இயேசுவானவர், ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் பொழுதும் வானத்திலிருந்து சத்தம் வந்தது. அது, “இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்'' என்று மட்டுமே உரைத்தது. (மத் 3: 17) மறுரூப மலையில் மட்டும்தான், **“இவருக்கு செவி கொடுங்கள்''** என்று சத்தம் வந்தது என்பதை கூர்ந்து கவனிப்பது மிக அவசியம். பிறகு சீஷர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, “இயேசுவைத் தவிர வேறொருவரையும் காணவில்லை".

மோசேயும், எலியாவும் மறைந்து போனது நியாயபிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் முடிவுக்கு வரப்போகிறது என்றும் சீடர்களுக்குக் காட்டுவது தான் **அந்தக் காட்சியின் நோக்கம்.** அது அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? ஆனால் அந்த அர்த்தத்தைப் புரிந்து கொள்ள சீடர்களால் அப்பொழுது முடியவில்லை. பின்னொரு நாளில் பேதுரு, அந்தக் காட்சியை நினைத்துப் பார்க்கிறான் (II பேது 1 : 16 - 18).

## ஜனங்கள் ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ளவில்லை : (அப் 14 : 8 -18)

முதலாம் நூற்றாண்டில், சத்தியம் திக்கெட்டும் பரவி வெற்றி நடை போட்டு வந்த காலத்திலும் இந்த நிலை இருக்கவே செய்தது. புறமார்க்கத்தாருக்கு நற்செய்தியைப் பரப்ப விசேடமாகத் தெரிந்து கொள்ளப்பட்ட பவுல். தன்னுடைய முதலாவது சுவிசேஷப் பயணத்தின் ஒரு பகுதியாக லீஸ்திராவுக்கு வருகிறார். அங்கே தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாய் இருந்த ஒரு மனிதன் பவுலால் சுகமாக்கப்படுகிறான். இந்த அற்புதம் கூடியிருந்தவர்களின் புருவத்தை உயர்த்தியது. பிரமித்து நின்றனர். பிரதிபலனாக ஏதாவது

செய்ய வேண்டுமென்று துடித்தனர். ஆனால் செய்ததைத் தான் சரியாக செய்யவில்லை. பரிதாபம்.

பிறவி சப்பாணி சுகமாக்கப்பட்டதில் மறைந்திருந்த ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ள முடியவில்லை. பவுலடியாரின் வார்த்தையின் வல்லமையை ஏற்றுக் கொண்டனர். ஆனால் அந்த வார்த்தைக்கு வல்லமை எப்படிக் கிடைத்தது என்று சிந்திக்க முற்படவில்லை. அந்த வல்லமையைக் கொடுத்த தேவன் யார் என்று வினவவில்லை. அந்த மகத்தான தேவனோடு என்னுடைய உறவு எப்படியிருக்கிறது என்று ஆராயவில்லை. ஆனால் அந்த அற்புதத்தை ஏற்றுக் கொண்டனர். பதிலுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றும் விரும்புகின்றனர். என்ன செய்தார்கள் தெரியுமா?

மனிதனை கடவுளாக எண்ணி, அவனுக்கு மாலை, மரியாதை செலுத்தி ஆர்ப்பாட்டம் செய்ய ஆசைப்படுகின்றனர். - சிந்தனைக்குத் தீனிபோடாமல், உணர்வுகளுக்கு அடிமையாகின்றனர். ஆடிப்பாடி ஆர்ப்பாட்டம் செய்வதோடு தங்கள் பங்கு முடிவடைகிறது என்று நினைக்கின்றனர். அதுவா ஆண்டவருடைய பார்வையில் மதிப்பானது? இங்கும் ஆவிக்குரிய சிந்தனையில்லாமல், சரீர கண்ணோட்டம் மேலோங்கி ஜனங்கள் தவறு செய்கின்றனர்.

அருமையான நண்பரே, மேலே பார்த்த சம்பவங்கள் முதலாம் நூற்றாண்டுக் காலத்தில் நடந்தவைதானே என்று நினைக்கிறீர்களா? ஆவிக்குரிய காரியங்களை ஏற்றுக் கொள்ளும் விஷயத்தில் மனிதன் மனநிலையில் பக்குவமோ அல்லது மாற்றமோ இன்றும் பெரிதாக ஏற்படவில்லை. சொல்லப்போனால் நிலைமை இன்னும் மோசமாக, அதேசமயம் வெகுவேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. மானிடத்தின் மாபெரும் தவறு தொடர்கிறது.

தத்துவார்த்த ரீதியாக கிறிஸ்தவத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பி மானிடம் தோற்றுக் கொண்டிருக்கிறது. தத்துவங்களின் மீது அல்ல, பேருண்மைகளின் மீது தான் கிறிஸ்தவம் கட்டப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டதான கிறிஸ்தவத்தை ஆவிக்குரிய சிந்தனையுள்ளவர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

மனித ஞானம் தேவனுக்கு முன்பாக ஒன்றுமில்லை. (I கொரி 1 : 25) ஆகவே ஆவிக்குரிய சிந்தனையை நாம் பெற்றுக் கொள்வோம். ஆண்டவரின் காரியங்களை அறிந்து, கீழ்ப்படிவோம். இம்மைக்குரிய ஆசிர்வாதத்தையும், மறுமைக்குரிய ஆசிர்வாதத்தையும் பெற்று சமாதான ஜீவிகளாக மாறுவோம்.

E.Z.S. ராஜநாயகம்

## நிச்சயமாய் நடக்கக் கூடியவைகள்

நாம் மிகவும் பயங்கரமான கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பய உணர்வு மக்களை ஆட்கொண்டிருக்கிறது. இன்றைக்கு நாம் சில காரியங்களைச் செய்ய வாய்ப்பு இருக்கலாம்; இதே நிலை நாளைக்கும் நீடிக்கும் என்று சொல்ல முடியாது. இந்த சூழ்நிலை நமக்கு கவலையையும், நம்பிக்கையின்மையையும் சோர்வையும் உண்டாக்குகின்றன.

பரிசுத்த வேதாகமம் கூட, நாளைக்கு என்ன நடக்கும் என்று அறியமாட்டோமே என்று கூறி நம்முடைய அறிவுக்கு எல்லை வகுத்திருக்கிறது. (யாக் 4:13,14.) ஆகவே இன்றைக்கு இருந்து நாளைக்கு மறைந்து போகும் அநித்தியமான உலகப் பொருட்களை நம்பி நாம் பெருமிதப்பட்டுக் கொள்ள முடியாது. (மத் 6 : 19 -21) வாழ்க்கை என்பது இப்படிப்பட்ட நிச்சயமற்ற காரியங்கள் மட்டும் நிறைந்ததா? நாம் நம்பிக்கை வைத்து நிம்மதியாக இருக்கக் கூடிய எதுவுமே இல்லையா? என்று திகைக்காதீர். சில மாறாத நிச்சயங்களும் உண்டு. இதோ! அவைகளில் சில. முதலாவது நாம் "**உலகத்தில் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை இங்கிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை**" என்று தேவனுடைய ஆவியைக் கொண்டு பவுல் அப்போஸ்தலன் பொருள் பொதிந்த இந்த வார்த்தைகளைக் கூறி விட்டு, தொடர்ந்து அவர், "**உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்.**

**ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும், அழிவிலும், அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளில் விழுகிறார்கள்.**

**பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்.**

**நீயோ, தேவனுடைய மனுஷனே இவைகளை விட்டோடி நீதியையும் தேவபக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும் சாந்த குணத்தையும் அடையும்படி நாடு.**

**விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு; நித்திய ஜீவனைப் பற்றிக் கொள். அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய், அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்** என்று கூறி வாழ்க்கையைப் பற்றி சில தெளிந்த கருத்துக்களை எடுத்து வைக்கிறார். (1 தீமோ 6 : 7 - 12).

வாழ்க்கையில் இரண்டு காரியங்கள் நிச்சயம் : ஒன்று அரசாங்கம் விதிக்கும் வரி, மற்றொன்று சாவு என்றார் ஒருவர். அதில்

உண்மையில்லை என்று சொல்லிவிட முடியாது. பவுல் அப்போஸ்தலன், மனிதன் உலகக் காரியங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. யாராக இருந்த போதிலும் நாம் எப்படி வந்தோமோ அப்படியே திரும்பிப் போவோம் என்பதை விளக்குகிறார். அதாவது நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை என்றும், நாம் ஒன்றும் கொண்டு போகப் போவதில்லை என்றும் கூறுகிறார். நாம் எப்போதும் நம்முடன் வைத்துக் கொள்ள முடியாத நாம் உலகை விட்டுப் போகும்போது எடுத்துச் செல்லமுடியாத செல்வத்தைத் தேடுவதிலும், சம்பாதிப்பதிலும் இவ்வளவு அக்கறை காட்டுவது மதியீனமான காரியம். அதனால் எப்பொழுதும் நிலைத்திருக்கக் கூடிய நியாயமானதும், நன்மை பயப்பதுமான காரியங்களிலும் நாம் ஈடுபாடு கொள்ளவேண்டும். "**பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள் பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுவதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இதயமும் இருக்கும்** என்றார் கிறிஸ்து (மத் 6 : 19 -21).

இரண்டாவதாக : கர்த்தருடைய வாக்குத் தத்தங்கள் மாறாதவைகள். பேதுரு,"தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறது போல கர்த்தர் தமது வாக்குத் தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" என்று கூறுகிறார் (2 பேதுரு 3 : 9) மனிதர் கொடுக்கிற வாக்குறுதிகளை நாம் எந்த அளவுக்கு நம்பலாம் என்பதில் நமக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் தேவனுடைய வாக்குறுதியைப் பொறுத்த வரையிலும் நாம் நூற்றுக்கு நூறு நம்பிக்கையுடன் இருக்கலாம். "**நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்**" என்கிறார். பவுல் (2 (தீமோ 1 : 12) தேவன் பொய் சொல்லார் என்று அடித்துக் கூறுகிறார் எபிரேய நிருப ஆசிரியர் (எபி 6 : 18) **பொய்யுரையாத தேவன் ஆதி காலமுதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத் தத்தம் பண்ணினார்** என்கிறார் பவுல் (தீத்து 1 : 3) கர்த்தர் தாம் நேசிக்கிற மக்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வாக்குத் தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். எடுத்துக்காட்டாக, "அவர் எப்போதும் நம்மோடே கூட இருக்கிறார் (மத் 28 : 20) "அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறோம்." (ரோமர் 8 : 28) "கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" (எபே 1 : 3) இவைகளையல்லாமல் வேறு பல வாக்குத்தத்தங்களையும் தேவன் கொடுத்திருக்கிறார். அவைகள் அனைத்தையும் ஏற்ற வேளையில்

நிறைவேற்றுவார் என்கிற நிச்சயம் நமக்கு உண்டு. ஏனெனில் கடந்த காலத்தில் அவர் கொடுத்திருந்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியிருக்கிறார்.

மூன்றாவதாக மரணமும் நியாயத் தீர்ப்பும் நிச்சயமானவைகள். "**அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது**" என்கிறார் எபிரேய நிருப ஆசிரியர் (எபி 9 : 27) அப்போஸ்தலன் பவுல் குறிப்பிடுவது போல கர்த்தர் மறுபடியும் வரும் போது சிலர் உயிருடன் இருப்பார்கள் என்றும் அவர்கள் மேகங்கள் வழியாய் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். (I தெச 4 : 13 -18) இப்போதுள்ள மாமிச சரீரத்தோடு ஒருவனும் பரலோகத்துக்கோ அல்லது நரகத்துக்கோ போகமுடியாது என்பதால் எல்லாரும் ஒன்று மரிக்க வேண்டும். அல்லது மறுரூபமாக்கப்படவேண்டும். அதன் பிறகு நியாயத் தீர்ப்பைச் சந்திக்க வேண்டும். யோபு கூறுவதைப் போல "ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான் (யோபு 14 : 1) யாக்கோபு "மேலும் நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்துக்குப் போய் அங்கே ஒரு வருஷம் தங்கி வியாபாரஞ் செய்து சம்பாத்தியம் பண்ணுவோம் என்பவர்களே, கேளுங்கள், நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலம் தோன்றி பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே" என்கிறார் (யாக் 4 : 13 -14)

நிச்சயமாக நாம் எல்லாரும் மரிக்கப் போகிறோம். ஆனால் அதற்குப் பிறகு என்ன? நியாயத் தீர்ப்பு நிச்சயம். ஆகையால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும். நாம் மரணத்தை சந்தித்தே ஆகவேண்டும். அதை தவிர்த்து விடவோ, தள்ளிப் போடவோ, தப்பித்துக் கொண்டு வேறு வழியில் பரலோகத்தை அடைந்து விடவோ முடியாது. நாம் மரிப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவுக்கு நியாயத் தீர்ப்பை சந்திப்பதும் வெகு நிச்சயம். அந்த நியாயத் தீர்ப்பில் நாம் செய்த நன்மைகளுக்கோ அல்லது தீமைகளுக்கோ தக்கதாக நமக்கு நீதி வழங்கப்படுவோம். கிறிஸ்து நம்முடைய நியாயாதிபதியாக இருக்கிறார் (அப் 7 : 31) அவருடைய வசனங்களின்படி நியாயந் தீர்க்கப்படுவோம். (யோவான் 12 : 48) மத் 25 : 46 கூறியுள்ளபடி, பாவம் செய்தவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்கள் நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்.

**நான்காவதாக :** கிறிஸ்து மறுபடியும் வருவார் என்பது மாறாத நிச்சயம். இயேசு எப்படி எடுத்துக் கொள்ளப்பட்டாரோ அப்படியே

திரும்பி வருவார் (அப் 1 : 11) இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கான சாட்சியங்கள் மறுக்க முடியாத அளவுக்குத் தெளிவாக இருந்த போதிலும் அநேகர் அதை நம்புவதில்லை (1 கொரி 15 : 1 - 8) அவர் உயிர்த்தெழுந்திராவிட்டால் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கை பொருள் அற்றதாயிருக்குமே. அவர் கல்லறையினின்று எழுந்து பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்துக் போயிருக்கிறார் என்பது உண்மை. ஆகவே மறுபடியும் வருவேன் என்று சொன்ன வாக்குத் தத்தத்தை நிச்சயமாக நிறைவேற்றுவார். ஆயினும் சில பேர், சொல்லி ஆண்டுகள் ஆயிரங்களாய் உருண்டோடி விட்டன. இதுவரை அவர் வரவில்லை. இனிமேல் வருவது என்பது நடக்கிற காரியமாய்த் தோன்றவில்லை என்று வாதிடலாம். பேதுரு வாழ்ந்த நாட்களிலும் அப்படிச் சொன்னவர்கள் உண்டு அதற்குப் பேதுரு அளித்த பதிலே இன்றைய அவிசுவாசிகளுக்கும் பொருந்தும் "**கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருடம் போலவும், ஆயிரம் வருடம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்றே இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்**" ( 2 பேது 3 : 8) அதாவது நாம் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிற வருடம் மாதம் எல்லாம் அவருடைய பார்வையில் அர்த்தமற்றவைகள். சொல்லி இரண்டாயிரம் ஆண்டுகளாகி விட்டனவே என்பதை வைத்துக் கொண்டு அவருடைய வாக்குத்தத்தங்களை சந்தேகிக்கக் கூடாது. அவர் காலத்தை வென்றவர்.

இயேசு மறுபடியும் எதற்காக வருகிறார்? இது அநேகருடைய கேள்வி. அவர் மீண்டும் வருவதற்குச் சில காரணங்கள் உண்டு.

1. அவருடைய வாக்குறுதியை நிறைவேற்ற
2. எல்லாக் காரியங்களுக்கும் ஒரு முடிவு உண்டாக்க
3. வானத்தையும் பூமியையும் அழித்துப்போட (2 பேது 3 : 10)
4. மரித்துப் போன நல்லவர்களையும், தீயவர்களையும் கல்லறையிலிருந்து உயிரோடு எழுப்ப (யோவான் 5 : 28, 29)
5. மனுக்குலம் அனைத்தையும் நியாயம் தீர்க்க (யோவான் 12 : 48)
6. தம்முடைய பிள்ளைகள் அடங்கிய இராஜ்ஜியமாகிய சபையை தேவனிடத்தில் ஒப்புக் கொடுக்க (1 கொரி 15 : 24)

ஆம், நண்பர்களே, கிறிஸ்து மறுபடியும் வருகிறார் என்பது மாறாத நிச்சயம். நீங்கள் அவரைச் சந்திக்க ஆயத்தமா? நிச்சயமானவைகள் என்று கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள காரியங்களுக்குச் செவி மடுத்து விசுவாசியுங்கள். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருக்காக வாழ்ந்து அவரைச் சந்திக்க ஆயத்தமாகுங்கள்.

**J.C. சோட்**

## பெண்கள் பகுதி

# ஒரு நல்ல மனைவியாக இருப்பது எப்படி?

பருவப் பெண்கள் திருமண நாளை ஆவலோடும் உற்சாகத்தோடும் எதிர்ப்பார்த்துப் பல இன்பக் கனவுகள் கண்டு கொண்டு இருப்பார்கள். மண நாள் என்னும் அந்த திருநாளைச் சந்திப்பதற்கான நீண்டதொரு திட்டத்தைத் தானாகவோ, சிநேகிதிகள்- மற்றும் பெற்றோர் களுடன் சேர்ந்தோ தீட்டி ஒத்திகை பார்த்துக் கொண்டிருப் பார்கள். சிலர் சிறுகச் சிறுக பணம் சேர்த்துத் தனிக்குடித்தனம் நடத்த தேவையான தட்டு முட்டுச் சாமான்கள், பொருட்கள் ஆகியவைகளை ஒவ்வொன்றாய் வாங்கி பத்திரப்படுத்தி அந்தத் திருமண நாள் என்று வருமோ என்று காத்துக் கொண்டிருப் பார்கள். பெற்றோர்களும், பெண்ணுக்குத் தேவையான பட்டுப் புடவைகள், துணி மணிகள், ஆபரணங்கள் ஆகிய வைகளையெல்லாம் சேகரம் பண்ணி தயார் நிலையில் இருப்பார்கள். இப்படி சகல ஏற்பாடுகளும் திருமண நாள் என்ற அந்த பொன்னான நாளை மனதில் கொண்டு செய்யப்படும்.

அதெல்லாம் சரி, அந்த திருமண நாள் என்ற ஒரு நாள் வைபவம் நடந்து முடிந்த பின் என்ன? மணப்பெண் மனை வியின் அந்தஸ்து பெறுகிறாள். மனைவியென்பதின் உண்மை யான பொருள் என்ன? அது ஒரு காதல் திருமணமாக இருந்தால் ஏற்கனவே ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அன்பு பெருகி ஆழமாகி ஒருவரையொருவர் இன்னும் நெருக்கமாய் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு உண்டாகும். அப்பொழுது முன்பு கண்ணுக்குத் தெரியாமல் இருந்த பல தவறுகளும் பலவீனங்களும் தென்பட ஆரம்பிக்கும்.

பெற்றோர்களாக பார்த்து செய்து வைக்கும் திருமணங்கள் நமது நாட்டில் இன்னும் நடைமுறையில் உள்ளது. அப் படிப்பட்ட திருமணங்களால் புதிய பல சூழ்நிலைகள் உருவாகும். முற்றிலும் புதிய மனிதர் களடங்கிய குடும்பம் முன் பின் பழக்கமில்லாத கணவன் இப்படி பல சூழ்நிலைகளைச் சந்திக்கவும், சமாளிக்கவும் வேண்டியிருக்கும். அந்த திருமணம் மணப் பெண்ணுடைய சம்மதத்தின் பேரில் நடந்திருந்தால் புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொண்டு தம்பதிகள் இருவரும் தங்கள் உறவை சரிசெய்து கொண்டு குடும் பத்தைக் கட்ட முயல வேண்டும்.

எப்படிப்பட்ட சூழ்நிலையில் மனைவிகளாக்கப்பட்டிருந்தாலும் சரி, அவர்கள் வெற்றி வாழ்க்கை வாழ்வதற்கு தேவையான தேவ ஆலோசனைகள் வேதாகமத்தில்

உண்டு. அவைகளைப் பின்பற்றி நடந்தால்வெற்றி நிச்சயம்.

1. தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரிகள் தங்கள் புருஷ ரிடத்திலும் தங்கள் பிள்ளை களிடத்திலும் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

2. தெளிந்த புத்தியுள்ள வர்களாக இருக்க வேண்டும்

3. அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

4. வீட்டில் தரித்திருக்கிறவர் களாக இருக்க வேண்டும்.

5. நல்லவர்களாக இருக்க வேண்டும்.

6. தங்கள் புருஷருக்குத் கீழ்ப்படிகிறவர்களாயிருக்க வேண்டும்.

**(தீத்து : 2, 4, 5)**

அதுபோக எபேசியருக்கு எழுதின நிருபத்திலும் கூட மனைவிமார்களுக்கு அறிவு ரைகள் கூறப்பட்டுள்ளன. "மனை விகளே கர்த்தருக்குக் கீழ்படிகிறது போல உங்கள் சொந்தப் புருஷர்களுக்கு கீழ்ப் படியுங்கள்" ஒரு மனைவி தன் கணவனுக்கு உண்மையாகக் கீழ்ப்படிந்தால் அல்லது கீழ்ப்படிய ஆரம்பித்தால் மேலே கூறப்பட்டுள்ள மனைவிக் குரிய எல்லா நல்லியல்புகளும் தானாகவே வளர்ந்து பெருகும். அப்படிப்பட்ட மனைவியை கண வனும் நேசிக்க ஆரம்பிப்பான். அப்பொழுது தன் மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாமிசமாக இருப்பார்கள் என்ற தேவ திட்டம் செம்மையாக நிறைவேறும்.

வேதாகமம் இங்கே அன்பு என்று குறிப்பிடுவது ஏதோ பால் கவர்ச்சியால் உந்தப்படும் ஒரு வித கிலு கிலுப்பு அல்ல; நம்மை நேசிக்கிறவர்களுக்கு நாம் என்ன செய்ய முடியும் என்று எண்ணிப் பார்த்துச் செயலாற்றக் கூடிய ஒரு உயர் நெறி. ஒரு மனைவி இப்படிப்பட்ட அன்புள்ளவளாய் இருப்பாளானால் கணவருடைய மனதைப் புரிந்து கொண்டு அவனுக்கு பிரியமாக நடந்து கொள்வாள். அவனுடைய உடைமைகளைப் பாதுகாப்பாள், அவருக்குப் பிரியமானவர்களை கண்ணியமாக நடத்துவாள். வீட்டுக் காரியங்களைப் பாங்காய்ச் செய்து அவனை மகிழ்விப்பாள். அவன் செய்கிற வேலைகள், அவனுடைய நண்பர்கள் அவனுடைய விருப்பு வெறுப் புகள் அவனுடைய சிந்தனை யோட்டங்கள் ஆகிய அனைத் தையும் தெரிந்து வைத்துக் கொண்டு அவனுடைய மகிழ்ச் சியிலும், துக்கத்திலும் பங்கு கொள்வாள்.

கணவனுக்கு கீழ்ப்படிந்து, நேசித்து கனப்படுத்துவது மனைவியின் பொறுப்பும் கடமை யுமாயிருக்கிறது. அவள் "தன்னு டைய சுயசரீரத்துக்கு அதிகாரி அல்ல. புருஷனே அதற்கு அதிகாரி" அதற்கென்று புருஷன் எப்படி வேண்டு மானாலும் நடந்து கொள்ளலாம் என்று பொருளில்லை. இதே விதி கணவனுக்கும் பொருந்தும் (1 கொரி 7 : 3 -5) ஒரு மனைவி தன்னுடைய நலனைவிடத் தன் பெற்றோர்களின் நலனை விட கணவனுடைய நலனை

அதிகமாகப் பேணி நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு தன் கடமையை நன்கு புரிந்து கொண்டு செயல்படும்போது கணவனுடைய இதயம் மகிழ்ந்து குடும்பத்தில் சந்தோஷமும் சமாதானமும் பெருகும், கர்த்தர் அப்படிப்பட்ட குடும்பத்தை ஆசீர்வதிப்பார்.

**ரேச்சல் ராஜநாயகம்.**

**பெட்டி பர்ட்டன் சோட்**

## ஊழியருக்கு ஓர் அறிவுரை

**முதிர் வயதுள்ளவர்களைக் கடிந்து கொள்ளாமல் அவர்களைத் தகப்பனைப் போலவும், இளம் வயது புருஷரைச் சகோதரர்கள் போலவும், முதிர் வயதுள்ள பெண்களை தூய மனதோடு சகோதரிகளைப் போலவும் பாவித்து புத்தி சொல்லு.**

**உள்ளபடி விதவைகளாயிருக்கிறவர்களைக் கனம் பண்ணு. விதவைகளுக்குப் பிள்ளைகளோ பேரப் பிள்ளைகளோ இருந்தால், இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்ப விஷயத்தில் பக்தி காட்டவும், பெற்றோர் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யவும் கற்றுக் கொள்ளக் கடவர்கள். இது கடவுளுடைய சந்நிதியில் உகந்தது. தீமுத் 5 14**

**விசுவாசியாகிய ஒருத்தியிடம் விதவைகள் இருந்தால், அவர்களுக்கு இவள் உதவி செய்யக் கடவள். சபையின் மேல் அந்த பாரத்தை சுமத்தக் கூடாது. உத்தம விதவைகளானவர்களுக்குச் சபை உதவி செய்ய வேண்டும்.**

**தீமுத் 5 6**

## அரசு வருகிறதா?

கிறிஸ்து மீண்டுமாக விரைவில் வந்து தனது அரசை இவ்வுலகில் நிறுவப் போகிறாரா? மத்திய கிழக்கு நாடுகளின் நடவடிக்கைகளை தொடர்ந்து கவனித்து வரும் பல மதத்தலைவர்கள், அங்குள்ள நிலைமையை பயன்படுத்திக் கொண்டு, கிறிஸ்து மீண்டும் விரைவில் வந்து தனது அரசை இப்பூமியில் நிறுவி ஆட்சி செய்யப் போகிறார் எனக் கூறுகின்றனர். இத்தகைய 'முன்னுரைத்தல்' ஒரு உண்மையைக் காணத்தவறிவிடுகிறது. அதாவது, இயேசு கிறிஸ்து தனது அரசை 1900 ஆண்டுகளுக்கு முன்பே நிறுவிவிட்டார் என்பதை

மாற்கு 9 : 1ம் வசனத்தில் இயேசு தனது சீடர்களிடம், "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."இயேசுவின் உதடுகளிலிருந்து வந்த இந்த தெளிவான அறிக்கை, அங்கு நின்று கொண்டிருந்த மக்கள் சிலரின் வாழ்நாளிலேயே இராஜ்ஜியம் (அரசு) வரும் என்பதைத் தானே காட்டுகிறது? அன்றைய தினத்தில், இயேசுவின் அருகில் நின்று கொண்டிருந்த எல்லா மக்களும் மடிந்து போய் பல நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. வரப்போகிற நாட்களில் இராஜ்யம் வரும் என்று இதற்கு அர்த்தம் அல்ல. மேற்சொன்ன அறிவிப்பை இயேசு வெளியிட்ட சிறிது காலத்திற்குள் இராஜ்ஜியம் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

கொலோசெயர் 1 : 13ம் வசனத்தில் அப்போஸ்தலர் பவுல் தேவனுக்கு நன்றி செலுத்துகையில், "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்" என்கிறார். பவுல் கொலோசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு தனது கடிதத்தை எழுதும் முன்பே கிறிஸ்துவின் இராஜ்ஜியம் நிறுவப்பட்டு விட்டது என்பதை இவ்வசனம் தெளிவாகப் போதிக்கிறது. முதல் நூற்றாண்டிலேயே பவுலும் பிற எல்லா கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்திற்குள் ஏற்கனவே "உட்படுத்தப்பட்டு" விட்டனர்.

எனவே, இயேசுவின் அறிக்கைக்குச் சற்று பின்னரும் (மாற்கு 9 : 1) பவுலின் வார்த்தைக்கு முன்னரும் (கொலே 1 : 13) இராஜ்ஜியம் வந்துவிட்டது. எப்போது இயேசுவின் இராஜ்ஜியம் வந்திருக்கும் என்பதைக் கண்டுபிடிக்க நாம் திணற வேண்டியதில்லை. இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தபின் ஏழு வாரங்கள் கழித்து வந்த யூதர்களின் பெந்தெகொஸ்தே எனும் நாளில் எருசலேமில் வல்லமையோடு இராஜ்ஜியம் வந்தது. அந்நாளில் நடந்தவற்றைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் அப்போஸ்தகர் நடபடி 2ம்

அதிகாரத்தில் பதிவாகியுள்ளன. அன்றைய தினத்தில் 3000 பேர்கள் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தனர். இதுவே கிறிஸ்துவின் இராஜ்ஜியமாகிய சபை உதயமான நாள் ஆகும்.

கிறிஸ்து மீண்டும் வருவாரா? அப்போஸ்தலர் நடபடி 1 : 11ம் வசனம் அவர் வருவார் என தெரிவிக்கிறது. ஆனால், இப்பூமியில் கிறிஸ்து இறங்கி ஒரு தலைமையகத்தை இங்கு அமைத்துக் கொண்டு ஆட்சி செய்யப் போவதாக வசனங்கள் போதிக்கவில்லை. வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரத்தை சிலர் சுட்டிக்காட்டி, கிறிஸ்து பூமிக்கு வந்து ஆளப்போவதாகக் கூறுகின்றனர். ஆனால், வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரத்தை கவனமாகப் படித்துப் பார்த்தால், கிறிஸ்து பூமிக்கு வருவது பற்றி அது ஒன்றும் கூறவில்லை என்பதைக் காணலாம்.

இராஜ்ஜியம் (அரசு) ஏற்கனவே நிறுவப்பட்டுவிட்டது, கிறிஸ்து அரசராக ஆண்டு வருகிறார். கிறிஸ்து மீண்டும் வரும் போது, மரித்தவர்களும், உயிரோடு இருப்பவர்களுமான எல்லா கிறிஸ்தவர்களும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்பார்கள். (1 தெசெ 4 : 17) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பூமியில் ஒரு இராஜ்ஜியத்தை நிறுவ அல்ல. "அதன் பின்பு முடிவு உண்டாகும், அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார்". (1கொரி 15 : 24).

இராஜ்ஜியத்தைக் காணவிரும்புவது நல்லதே. ஆனால் அதை எதிர்காலத்தில் தேடவேண்டியதில்லை. கிறிஸ்துவின் இராஜ்ஜியம் அவருடைய சபையே. அவருடைய சபையைக் கண்டுபிடிக்கும் போது, அவருடைய இராஜ்ஜியத்தை கண்டு பிடிக்க முடியும்.

Royce Frederick. **ராய்ஸ் ப்ரெடெரிக்.**

## இயேசு சொல்வதைப் பாருங்கள்

**அன்றியும் அவர்களை நோக்கி இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்கு சொல்கிறேன் என்றார்.**

**மாற்கு 9 1**

## தேவனின் கரங்களை மட்டுப்படுத்தாதீர்!

சகலவற்றையும் படைத்து ஆளும் தேவனுக்கு மனிதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் வல்லமையும் உண்டு! என்ற போதிலும், தமது ஜனமாகிய இஸ்ரவேலரின் பேரில் தேவன் வெகு காலமாக துயரப்பட்டுக் கொண்டிருந்தார்! "அவரோ அவர்களை அழிக்காமல், இரக்க முள்ளவராய் அவர்கள் அக்கிர மத்தை மன்னித்தார். அவர் தமது உக்கிரம் முழுவதையும் எழுப் பாமல், அநேகந்தரம் தமது கோபத்தை விலக்கிவிட்டார். அவர்கள் மாம்சமென்றும் திரும்பி வராமல் அகலுகிற காற்றென்றும் நினைவு கூர்ந்தார்". ஆனாலும் அவருடைய அன்புக்கும் இரக்கத் திற்கும் அவருடைய மக்கள் இன்னும் இணையவில்லை. "எத்தனை தரமோ வனாந் தரத்திலே அவருக்குக் கோபம் மூட்டி, அவாந்தர வெளியிலே அவரை விசனப்படுத்தினார்கள், அவர்கள் திரும்பித் தேவனைப் பரீட்சைப் பார்த்து, இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தி னார்கள்" (சங். 78:38 - 41) உருவகமாகக் கூறுவதாயின், தேவனுடைய கரங்களைக் கட்டிப் போட்டு, அவருடைய மக்களாகிய தங்களுக்கு அவர் செய்யக் கூடியவற்றை மட்டுப்படுத்தினார் கள்.

### இஸ்ரவேலின் பிள்ளைகள் தேவனை மட்டுப்படுத்தினர்!

வாக்குத்தத்தம் செய்யப் பட்ட நாட்டுக்கு மக்களை தேவன் வழி நடத்த தயாரான வேளையிலும், தேவனுக்கு விரோதமாகப் போர்க்கொடி தூக்கி அவரை விட்டு விலகிய ஒரு நாட்டைப் பற்றியே நமது வசனப்பகுதி கூறுகிறது. அவர்களுக்கு விசு வாசம் இல்லாதபடியால், அவர்கள் "வல்லமையுள்ள தேவனை மட்டுப்படுத்தினார்கள்". எனவே, கீழ்க்கண்டவாறு வசனம் கூறு கிறது. "ஆனாலும் சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந் தார்கள்; அவருடைய ஆலோச னைக்கு அவர்கள் காத்திராமல், வனாந்திரத்திலே இச்சையுள்ளவர் களாகி, அவாந்தர வெளியிலே தேவனைப் பரீட்சை பார்த் தார்கள். அப்பொழுது அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் ஆத்துமாக் களிலோ இளைப்பை அனுப் பினார்". (சங்கீதம் 106 : 13 -15) ஆம், அவர்கள் தீவிரமாக தேவனை மட்டுப்படுத்தினார்கள், என்றாலும் உண்மையில், அவர்கள் எரிச்சல் அடையத்தக்க வகையில் தங்களைத்தானே மட்டுப்படுத்திக் கொண்டதைக் கண்டனர்! தேவன் நமக்குக் கூறுகிறார். "அந்த வனாந் தரத்திலே இஸ்ரவேல் புத்திர ராகிய சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து, நாங்கள் இறைச்சிப் பாத்திரங் களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப் போனோமானால் தாவிளை! (யாத். 16 : 2 -3).

இஸ்ரவேலர் தங்கள் அவநம்பிக்கை, கீழ்ப்படியாமை

ஆகிய செயல்களால், தேவன் தங்களுக்குச் செய்யக்கூடியவற்றை ஏற்கனவே மட்டுப்படுத்திக் கொண்டிருந்தனர். "நான் கூப்பிட்டும், நீங்கள் கேட்க மாட்டோம் என்கிறீர்கள், நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனுமில்லை. என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்து கொள்ளுதலை வெறுத்தீர்கள். ஆகையால் நானும் உங்கள் ஆபத்துக் காலத்தில் நகைத்து நீங்கள் பயப்படும் காரியம் வரும்போது ஆகடியம் பண்ணுவேன்". (நீதி I : 24 -26) தேவன் இவ்வாறு கூறியதில் வியப்பென்ன? தேவன் அளிக்க விரும்பிய நன்மையையும் கருணையையும் அவர்கள் வெறுத்து ஒதுக்கினர். இவ்வாறாக, தேவனை அவர்கள் மட்டுப்படுத்தினர், அதன் விளைவாக, வனாந்தரத்திலே 40 ஆண்டுகள் அலைந்து திரிந்தனர். மேலும் இந்தக் காரணத்தாலே, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டுக்கு வெளியே அவர்கள் மரித்தனர்.

## மனிதனுடைய பாவங்களும், குற்றங்களும் தேவனை மட்டுப்படுத்துகின்றன!

தேவனுடைய ஆசீர்வாதங்களை மனிதன் இழந்து நிற்கும் நிலைக்கு, தேவன் ஒருபோதும் காரணமல்ல! எப்போதும் மனிதனே குற்றவாளியாகிறான். "இதோ இரட்சிக்கக் கூடாத படிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை, கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. (ஏசாயா 59 : 1 -2) பிரிவினைச்சுவரை மனிதனே எப்போதும் எழுப்புகிறான், தேவன் அல்ல. மனிதனுடைய பாவச் செயல் அவனை அகற்றிப் போடுகிறது. இச்செயலால் தேவனுடைய ஆசீர்வாதங்களை மனிதன் மட்டுப்படுத்துகிறான்.

மனிதனுடைய பயனற்ற தன்மையை முற்றிலுமாகக்காண, ஏசாயா 50: 1 - 5 வசனங்களில் தேவன் அளிக்கும் பதிலை வாசித்துப் பாருங்கள். நிச்சயமாக, தேவன் அவருடைய மக்களை அமோகமாக ஆசீர்வதிக்க விரும்பினார். ஆனால் முரட்டாட்டம் பிடித்த மனிதன் அவரை விட்டு விலகிப் போனான். தேவனுடைய பொறுமையே கரைந்து போகிறது. அவர் கூறுவதைக் கேளுங்கள். "நான் கூப்பிட்டும், நீங்கள் கேட்க மாட்டோம் என்கிறீர்கள்; நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை. என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்து கொள்ளுதலை வெறுத்தீர்கள். ஆகையால், நானும் உங்கள் ஆபத்துக் காலத்தில் நகைத்து, நீங்கள் பயப்படும் காரியம் வரும்போது ஆகடியம் பண்ணுவேன். (நீதி 1 : 24 -26) தேவனை மட்டுப்படுத்த மனிதன் முயலும்போது, பதிலுக்கு தேவன் அவனை மட்டுப்படுத்துவதை அவன் காண்கிறான். உதவி செய்ய தேவன் அருகில் இல்லாதபோது, அழிவுகளும்

துன்பங்களும் பெருக்கெடுத்து தாக்குகின்றன! தெளிந்த புத்தியும் நியாயமும் அப்போது கூறு கின்றன. "எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்தி லிருந்து எனக்கு ஒத்தாசை வரும்". (சங்கீதம் 121 : 1 - 2) உதவி செய்ய தேவன் தயாராக இருக்கிறார். ஆனால் மனிதனோ தன்னை பாவத்தில் கட்டிப் போடும் தந்திரக் கதவைத் திறக்க அல்லவோ தயாராக நிற்கிறான்!

### நமது தவறான உறவுகள் தேவனை மட்டுப்படுத்தக் கூடும்

தேவனிடத்தில் ஜெபம் செய்யும் நமது தனிப்பட்ட உரிமையானது, மிகவும் மதிப்புள்ள ஒரு ஆன்மீக ஆசீர்வாதமாகும் என்றாலும், நமது ஜெபங்கள் ஏற்றுக் கொள்ளப்பட தேவனோடு சரி யானதொரு உறவு அமைந்திருக்க வேண்டும். "அவர்கள் கூப்பி டுகிறார்கள், அவர்களை இரட்சிப் பார் ஒருவருமில்லை; கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்களுக்கு அவர் உத்திரவு கொடுக்கிறதில்லை". (சங்கீதம் 18 : 41) தேவனுக்கு விரோதமாக நடப்பவர்கள், தங்கள் ஜெபங்கள் பதிலளிக்கப்படும் என எதிர் பார்க்க தேவையில்லை. அவர் களுடைய சொந்த பாவநிலை தேவனை மட்டுப்படுத்துகிறது; எனவே அவர்களுடைய ஜெபங் களை அவர் கேட்கவோ, பதிலளிக்கவோ மாட்டார். ஆனால் நீதிமான்கள் நிலையோ அவ் வாறில்லை; " . . . . . . . .

நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ள தாயிருக்கிறது". (யாக். 5 : 16)

### மனிதன் ஜெபிக்கத் தவறுவது தேவனை மட்டுப்படுத்துகிறது

தேவனுடைய பிள்ளை களும் பல சமயங்களில் அவருடைய ஆசீர்வாதங்களை இழந்து விடுகின்றனர். ஏனெனில் அவர்கள் ஜெபம் செய்யத் தவறி விடுகின்றனர். "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப் பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்" (2 நாளா 7:14) என்ற வாக்குத்தத்தத்தோடு சாலமோனை தேவன் சந்தித்தார். ஆனால் வாஞ்சையோடும், எப் போதும் ஜெபம் செய்யத் தவறும் சீடர்கள் தேவனை மட்டுப்படுத்து கிறார்கள்! "நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலை செய்தும், பொறாமையுள்ளவர்களாயி ருந்தும், அடையக் கூடாமற் போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக் கிறதினாலே, உங்களுக்குச் சித்திக் கிறதில்லை. நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிற படியினால், பெற்றுக் கொள்ளாம

லிருக்கிறீர்கள்" (யாக். 4 : 2 - 3) என யாக்கோபு கூறினார்.

மனிதனுடைய தீய ஆவியும், ஜெபம் செய்யத் தவறுதலும் தேவனை மட்டுப்படுத்துகின்றன! தேவனுடைய பிள்ளைகள் கேட்கத் தவறுவதால் அவரை மட்டுப்படுத்துகின்றனர்! நமது விசுவாசக் குறைவால், அவருடைய பெரிதான கிருபையைப் பெற இயலாமல் ஓரங்கட்டப்பட்டு, அவருடைய அளவற்ற அன்பென்னும் சமுத்திரத்தினின்று அகற்றப்படுகிறோம். இயேசு, சீமோனை நோக்கி, "ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய், மீன் பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார்" (லூக். 5 : 4) ஆனால் தண்ணீரை சோதிக்க நாம் அஞ்சுகிறோம். நாம் கேட்பதில்லை, ஏனென்றால் பெற்றுக் கொள்வோம் என்ற போதுமான நம்பிக்கை நம்மிடம் கிடையாது, இவ்வாறான நமது நம்பிக்கையின்மை தேவனை மட்டுப்படுத்துகிறது. என்ற போதிலும், "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" என நமது கர்த்தர் வாக்குத்தத்தம் செய்தார். (மத். 7 : 7 -8) இயேசு இதற்கு எந்தவித நிபந்தனையும் விதிக்கவில்லை; நமது விசுவாசமின்மையே கர்த்தரை மட்டுப்படுத்துகிறது.

## முறையற்ற ஜெபங்கள் தேவனை மட்டுப்படுத்துகின்றன!

தங்களுடைய சரியான வாழ்க்கையை ஜெபங்களில் பிரதிபலிக்கத் தவறுவதால் பலர் தேவனை மட்டுப்படுத்துகின்றனர்! "வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" (நீதி 28:9) என தேவன் கட்டளையிட்டிருக்கிறார். பரிசுத்தவான்கள், தவறான காரியங்களைக் கேட்டு அவர்களுடைய ஜெபங்களுக்கு தேவன் பதிலளிக்க இயலாதபடி அவரை மட்டுப்படுத்துகின்றனர்! யோபு கூட இப்பாடத்தைக் கற்றுக் கொண்டான். "அங்கே அவர்கள் பொல்லாதவர்களின் பெருமையினிமித்தம் கூப்பிடுகிறார்கள்; அவரோ மறு உத்திரவு கொடுக்கிறதில்லை. தேவன் வீண் வார்த்தைக்குச் செவி கொடார், சர்வ வல்லவர் அதைக் கவனியார்". (யோபு 35 : 12 -13)

ஏற்கனவே யாக்கோபு 4 : 3ம் வசனத்தில் நாம் படித்தது போல, நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்". ஒரு குழந்தைக்குக் கேடானதைத் தர பெற்றோர்கள் மறுப்பதைப் போல நமது ஆன்மீக வாழ்வுக்குத் தீமையானதை தேவன் தருவதில்லை. "ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது,

பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மை யானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத் 7 : 11) உங்கள் சரீர இச்சைகளைத் திருப்தி செய்யும் காரியங்களைத் தேவனிடம் கேட்டு, அவர்களை மட்டுப்படுத்தாதீர்!

## வேதாகமத்தைப் படிக்கத் தவறுதல் தேவனை மட்டுப்படுத்துகிறது!

தேவனுடைய வசனத்தைப் பொறுத்தமட்டில் நமது நிலை எதுவோ, அதுதான் நமது ஜெபங்களை தேவன் கேட்கும் நிலையையும் தீர்மானிக்கிறது! தேவ வசனங்கள் பாதுகாக் கப்பட்டு நமக்கு அளிக்கப் பட்டுள்ளதின் காரணம் என்ன வென்று உங்களுக்குத் தெரியுமா?" வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டி ருக்கிறது தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரி யையுஞ் செய்யத் தகுதியுள்ள வனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர் திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக் குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது". (2 தீமோ 3 : 16, 17). எனவே தான், பரிசுத்த வான்கள், "நீ வெட்கப்படாத ஊழிக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாயப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" ( 2 தீமோ 2 : 15) எனக்கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறாக, தனது வசனத்தின் வழியாக தேவன் தம்மைத் தாமே மனிதனுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்; ஆனால், மனிதன் அவருடைய வசனங்களைப் படிக்கத் தவறி, அவரை மட்டுப்படுத்துகிறான்!

வேதாகமத்தை மூடி மேல் தட்டிலே விட்டு விடும் சபை அங்கத்தினர்கள், அடிக்கடி தேவ னுடைய வாயை வல்லமையோடு அடைத்துப் போடுகின்றனர்; அதன் விளைவாக தேவனை மட்டுப்படுத்துகின்றனர்! நற்செய் தியை பயன்படுத்தாமல், கிறிஸ் துவுக்கு ஆத்துமாக்களை ஆதாயப் படுத்த அவர்கள் தவறி விடுகின்றனர். அதன் விளைவாக தேவனுடைய கரங்களை மட்டுப் படுத்துகின்றனர். ஏனெனில், அவருடைய வார்த்தை எங்கும் பரவ அவர்களுடைய வாயைத் தான் அவர் பயன்படுத்த வேண்டும்! சத்திய வசனத்தை சரியாக பயன்படுத்த" தவறு வதால் தேவனை மட்டுப்படுத் துகிறோம்; ஏனெனில் "நீதியின் வசனத்தில் நாம் பழக்கமில்லா தவர்களாக இருக்கிறோம்" (எபி 5 : 13). தேவன் நமக்கு அளித்துள்ள "அன்புக் கடிதங் களை" ஆர்வத்துடன் படித்து, நமது அறியாமையை அகற் றினால் நமது வாழ்விலும் செல்வாக்கிலும் தேவன் மட்டுப் படுத்தப்படுகிறார்! நமது இரட்ச கரின் விலையேறப்பெற்ற இரட்சிப்பின் வசனத்தைப் படிப்பதைவிட, விளையாட்டு, அரசியல் செய்திகளைப் படிக்க அதிக நேரத்தை நாம் செலவிடும் போது தேவனை நாம் மட்டுப்படுத்துகிறோம்! "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும்

உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்" (ஓசியா 4 : 6) நம் நிலை எவ்வளவு பரிதாபமாக இருக்கக் கூடும் என்பதைப் பார்த் தீர்களா? தங்களை நேசிக்கும் தேவனை விட்டு விலகிப் போகும் ஒரு கீழ்ப்படியாத மக்கள் கூட்டத்தைப் பாருங்கள்! இருந்தாலும், சீடர்களாகப் பணி புரியும் பலரின் நிலையையே இது படம் பிடித்துக் காட்டுகிறது. இவர்கள் தேவனை மட்டுப்படுத்து கிறார்கள்!

## தேவனுக்கு ஊழியஞ் செய்ய மறுத்து, அவரை மட்டுப்படுத்துவது!

கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய மறுக்கும் அவருடைய சபை அங்கத்தினார்களால் அவர் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார். "நீ போய் இன்றைக்கு என் திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்" (மத் 21 : 28) என உவமையாக இயேசு போதித்தார். கிறிஸ்தவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் கிறிஸ்து தனது கால்களை அல்ல, நமது கால்களையே போகச் சொல்லுகிறார்; அவருடைய கரங்களை அல்ல, ஆனால் நமது கரங்களால் வேலை செய்யச் சொல்லுகிறார், வேறு எவரையும் அல்ல, நம்மைத்தாமே ஊழியஞ் செய்ய அழைக்கிறார். அவருடைய அழைப்பிற்கு செவி சாய்க்காவிட்டால் நாம் கர்த்தரை மட்டுப்படுத்துகிறோம்; "ஆகை யால், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர் களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள் ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்" (மத். 28 : 19 -20) என்பது அவரது ஆணை. இந்த நிரந்தர ஆணையானது நமக்கும் தரப்பட்டுள்ளது! இப்பணியை நாம் செய்யத் தவறினால், அது செய்யப்படாமலேயே நின்று போகும்!

இதோ நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை; உங்களுக்கு ஒரு பணி தரப்பட் டுள்ளது; வேறு யாரும் அதைச் சரியாகச் செய்ய இயலாமற் போகலாம். ஆத்துமாக்கள் உங்களுக்காகக் காத்திருக்கின் றன; பிறரால் அவற்றை அணுக முடியாமற் போகலாம்! தனது திறமைக்கேற்ப கிறிஸ்துவின் சரீரமாகிய ஒவ்வொரு உறுப் பினரும் செயல்படத் தொடங் கினால், பின்னர் கிறிஸ்துவுக்குள் இவ்வுலகம் முழுவதையும் கொண்டு வருவோம்! ஆனால், ஒவ்வொரு உறுப்பினரும் கர்த்தரால் உபயோகப்படுத்தப்பட தயாராகும் வரை நாம் தேவனின் கரங்களைக் கட்டிப் போட்ட வர்களாக இருப்போம்.

**தமிழில் : எஸ்.எஸ். ராஜன்**

## மனிதன் பாவத்தில் பிறக்கிறானா?

மனிதன் பாவத்தில் பிறப்பதாக அநேக மக்கள் போதிக்கின்றனர். வேதாகமத்தைப் படிக்காத பலர் அதை உண்மை என நம்புகின்றனர். ஆனால், ஆதாமின் · பாவம் மனுக்குலம் முழுவதையும் பிடித்துக் கொண்டு தொடருகிறது என்பதாக வேதாகமம் போதிக்கவில்லை.

எசேக்கியேல் 18 : 20ம் வசனத்தில், வேதாகமம் கூறுகிறது " . . . . . . . குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தை சுமப்பதுமில்லை . . . . . . . . ."ஆதாமின் பாவத்தை வாரிசாக இன்றைய குழந்தைகள் பெற்றுக் கொள்ளவில்லை என்பதற்கு இந்த வசனச் சான்று ஒன்றே போதும். மேலும், சிறு குழந்தைகள் பற்றி இயேசு பேசும் போது, அவர்கள் பாவத்துடன் இருப்பதாக அவர் கூறவில்லை. மாறாக, "பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" என்று கூறினார். (மத். 19 : 14).

ஒரு குழந்தையின் முன்னோர்களுடைய பாவங்களுக்காக அக்குழந்தைக்கு நித்திய தண்டனை அளித்தால் தேவன் மிகவும் அநியாயம் செய்பவராகக் காணப்படுவார். ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் தேவனுக்கு முன்பாக நின்று நியாயந் தீர்க்கப்படுவான் என்று வேதாகமம் கூறுகிறது. அப்போது, வேறு ஒரு மனிதன் செய்தவைகளுக்காவோ அல்லது செய்யத் தவறியவைகளுக்காவோ அல்ல. ஆனால் நியாயந்தீர்க்கப்படும் மனிதன் எவனோ அவன் செய்த, அல்லது தவறியவைகளுக்கு மட்டுமே நியாயந் தீர்க்கப்படுவான் என்று வேதாகமம் கூறுகிறது. "நாம் எல்லோரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போம் . . . . . . . நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" (ரோமர் 14: 10 , 12)

அடிப்படை விதிகளில் எது சரி, எது தவறு என பாகுபடுத்திக் கண்டு பிடிக்க கூடிய நேரம், ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் வருகிறது. தவறைச் செய்ய (வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள தேவனுக்கு விரோதமான காரியங்கள்) அவன் முற்பட்டால் அவன் பாவம் செய்கிறான். ஆனால், நல்லதுக்கும் கெட்டதுக்குமுள்ள வித்தியாசத்தை சிறு குழந்தைகள் அறியாத காரணத்தால் எது சரி, எது தவறு என தேர்ந்தெடுக்க முடியாதபடியால் அவர்களிடம் பாவம் இல்லை. இதைத்தான் வேதாகமம் போதிக்கிறது.

**எஸ்.எஸ்.ராஜன்.**

## நான் ஏன் பிறந்தேன்

மனித வாழ்க்கை பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன. மானிடராய் பிறப்பது அரிது! மனிதனாய் பிறந்திருக்கவே கூடாது! வாழ்க்கை வாழ்வதற்கே! வெந்ததை தின்போம், விதிவந்தால் சாவோம்! நரகமாவது மோட்சமாவது இருக்கும் வரை அனுபவிப்போம்!

இவையெல்லாம் வாழ்க்கை பற்றி நாம் கேள்விப்படும் சில மதிப்பீடுகள், இவைகளிலிருந்து மக்களுக்கு வாழ்க்கை பற்றிய ஒரு தெளிவான கருத்து இல்லை என்பது தெளிவாகிறது. வாழ்க்கை என்பது என்ன என்பதை புரிந்து, அதை முறையாக துவங்கும் முன்னரே பலருக்கு அது முடிந்துவிடுகிறது. சிலர் தத்துவார்த்தமாக நான் ஏன் பிறந்தேன்? நான் எங்கிருந்து வந்தேன்? ஏன் வாழ்கிறேன்? எவ்வளவு காலம் வாழப்போகிறேன்? மரணம் நிச்சயம்! அதன் பின் என்ன நிகழும்? என பல வினாக்களை தொடுத்தாலும் அவைகளுக்கு சரியான பதில் தெரியாமல் தவிக்கின்றனர்.

மானிட வாழ்க்கையின் துவக்கம், நோக்கம், பிரச்சனை, தீர்வு மற்றும் மறுமை பற்றிய உண்மையை யார்தான் சரியாகச் சொல்லமுடியும்? உலகத்தையும் மனிதனையும் படைத்த மெய்தேவன் தான் இது பற்றிய உண்மையை சரியாகக் கூறமுடியும். எவரும் தற்செயலாகவோ அல்லது விதிவசத்தாலோ பிறந்து, வாழ்ந்து, சாவதில்லை. மனிதன் விலங்குகளை விட எவ்வளவு மேலானவனோ அவ்வளவு மேலான நோக்கம் அவன் வாழ்க்கைக்கு இருக்கிறது.

## மனித வாழ்க்கையின் துவக்கம்

தேவன் உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் படைத்தார். ஒரு கட்டிடம் பொறியாளரையும் ஒரு ஓவியம் ஓவியரையும் புலப்படுத்துகிறது. அதுபோல தேவனுடைய ஆச்சரியமான படைப்புக்கள் அவர் இருப்பதையும் அவருடைய ஆற்றலையும் உணர்த்துகின்றன. (ரோ 1 : 18 -20)

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது (சங். 19 : 1). தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான். அவர்கள் தங்களை கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்து வருகிறார்கள். (சங். 14 : 1)

அவர், முதல் மனிதனாகிய ஆதாமையும் ஏவாளையும் தமது சாயலாக பூரணராக படைத்தார் (ஆதி. 2:7, 1:27) நான் பிரமிக்கதக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன். என் கருவை உம்முடைய கண்கள் கண்டது. என் அவயவங்களில்

ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும் அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புத்தகத்தில் எழுதியிருந்தது என தாவீது தான் தேவனால் படைக்கப்பட்ட விதத்தை கூறுகிறார். (சங். 139: 14 - 16) நாமெல்லாரும் கடவுளின் திட்டப்படி இவ்வுலகில் படைக்கப்பட்டுள்ளோம்.

## வாழ்க்கையின் நோக்கம்

கடவுள் நமது வாழ்க்கைக்கு சிறந்த நோக்கத்தை வைத்திருக்கிறார். நாம் அவரை தேடி அவருடைய திருவுளப்படி வாழ்வதே அந்த நோக்கம் (மீகா 6 : 8, அப் 17 : 26 -27) " படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவை படைத்தான் தன்னை வணங்க" என்பது முன்னோர் வாக்கு. மெய்தேவனை அறியாமலிருப்பது மனிதனை விலங்குகளுக்கு ஒப்பாக்கிவிடுகிறது. அவரைப் பற்றி அறிந்திருப்பதே மெய்யறிவு (சங். 49 : 20, நீதி. 9 : 10).

பணம் சேர்ப்பது, பொருள் சேர்ப்பது, உலகை ஆதாயப்படுத்துவது மற்றும் சரீர இச்சைகளின்படி வாழ்வது வாழ்க்கையின் நோக்கமன்று.

பணப்பிரியன் பணத்தினால் திருப்தி அடைவதில்லை. செல்வப் பிரியன் செல்வத்தினால் திருப்தி அடைவதில்லை (பிர. 5:10). பண ஆசை எல்லா தீமைக்கும் வேராய் இருக்கிறது (1 தீமோ. 6 : 10).

ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல (லூக். 12 : 15. உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம் (1 தீமோ, 6 : 7). ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என்றார் இயேசு கிறிஸ்து (மத் 16 : 26). உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போகும்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனே என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் ( 1 யோவா. 1 : 17).

அப்படியானால் வாழ்க்கையின் நோக்கம் தான் என்ன? "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; பின்பு இவைகளெல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும்" என்றார் இயேசு கிறிஸ்து (மத். 6 : 33). தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள். இதுவே எல்லா மனிதர் மேலும் விழுந்த கடமை. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார் (பிர. 12 : 13 -14).

# பாவம் - வாழ்வின் பெரும் பிரச்சனை

வறுமை, வேலையின்மை, ஏற்றத்தாழ்வுகள் போன்ற சமூக பொருளாதார பிரச்சனைகள்தீர்வுக்குரியவைகள்.

மனிதனின் ஆன்மீக பாவமும் மெய் தேவனை பற்றிய அறியாமையும் அவனால் தீர்க்க முடியாத பெரும் பிரச்சனையாக இருக்கிறது. தேவன் உலகத்தையும் மனிதனையும் படைத்தார். மனிதன் அவரை உருவாக்கி அமைக்க முடியாது. மனிதன் கட்டிடம் கட்டுவதை பார்த்திருக்கிறோம். கட்டிடம் மனிதனை உருவாக்குவதை நாம் பார்த்ததில்லை.

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம் என்றார் மெய்தேவன் (யாத். 20 : 3 -5).

அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். சிருஷ்டிகரை தொழுது சேவியாமல் சிருஷ்டியை தொழுது சேவித்தார்கள் (ரோ. 1 : 23 -25). இம்முயற்சியில் தோன்றிய சமயங்கள் சமூகத்தில் ஏற்ற தாழ்வுகளை உருவாக்கி, தீண்டாமை, சதி, பாலிய விவாகம், பெண் சிசு கொலை, மிருகபலிகள் போன்ற சமூகக் கேடுகளை பேணி வருவதாக கருதப்படுகிறது.

உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராய் இருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. நாம் தேவனுடைய படைப்புகளாயிருக்க, மனுஷருடைய சித்திர வேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது (அப். 17: 24, 29).

எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்துவிட்டனர் என வேதம் கூறுகிறது (ரோ. 3:23ï தேவனுடைய கற்பனைகளை மீறி நாம் யாவரும் பாவம் செய்துள்ளோம். (1 யோவா. 3 : 4) பாவத்தின் சம்பளம் நரகாக்கினை (ரோ. 5 : 26, 6 : 23), பாவம் செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான். (யோவா, 8 : 34). பாவம் மனிதனை வஞ்சிக்கிறது, தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது (ரோ. 7 : 11, ஏசா, 59 : 1 - 2).

ஐயோ என்னால் திருந்த முடியவில்லையே! ஐயோ! நான் பாவ பழக்கங்களை விட்டுவிட போராடியும் என்னால் விடமுடியவில்லையே என ஏங்கி தவிப்பவர் ஏராளம். அரசு சட்டம் மனிதனை பாவத்திலிருந்து விடுவிக்க முடியவில்லை. பூரண மதுவிலக்கு கொள்கை இதுவரை வெற்றி பெறவில்லை. சமய சன்மார்க்க ஈடுபாடும் அதற்கு நிவாரணமல்ல. 40 நாள் சமய ஈடுபாட்டின் பின் மீண்டும் தவறுகள் தொடருகின்றன. மருத்துவமும் உளவியல் சிகிச்சையும் பாவப் பிரச்சனையை தீர்க்க முடியவில்லை. சுயக்கட்டுப்பாடும் கைக்கொடுக்கவில்லை. பாவம் அவ்வளவு பயங்கரமானது! மனிதன் தன்னை சீர்திருத்தவும் பாவத்திலிருந்து விடுவிக்கவும் முடியாமல் தவிக்கிறான்.

மனிதன் நினைக்கிறபடி பாவம் அவனுக்கு திருப்தியை அல்லது சாதனை உணர்வை கொடுப்பதில்லை. மாறாக அதன் இழிநிலையைப் பாருங்கள்!

**சினிமா பழக்கம்** : சினிமா பாணி குற்றங்களையும் ஒழுக்கக் கேட்டையும் சமுதாயத்தில் வளர்த்துள்ளன.

**மது பழக்கம்** : துயரம், வறுமை, அவமானம், நோய் மற்றும் அகால மரணத்தை கொண்டு வருகிறது.

**பாலியல் பாவம்** : வாழ்க்கையை நரகமாக்கி குடும்பங்களை சிதறடிக்கிறது. இந்தியாவில் சுமார் 10 லட்சம் பேரை "எய்ட்ஸ்" தொற்றும் அபாயம் உள்ளதாக சுகாதார துறை புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

**புகை பழக்கம்** : நுரையீரல் நோயை உண்டாக்கி இந்தியாவில் வருடத்திற்கு சுமார் ஆறு இலட்சம் பேரை கொல்வதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

**போதை பொருட்கள்** : இப்பழக்கத்தால் இளைஞர்களின் வாழ்வு அழிந்து வருகிறது.

**சூதாட்டம்** : வறுமையையும் இழிவையும் ஏற்படுத்துகிறது.

பாவத்தின் விளைவாக வரும் குற்ற உணர்வு, பயம், மரணம், வேதனை, தேவ தண்டனை பற்றி சொல்லவே வேண்டாம்.

## தீர்வு

தேவன் பாவிகளாகிய நம்மை நேசிக்கிறார். பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1 தீமோ 1 : 15). அவர் நமது பாவங்களுக்காக சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். அவர் பிதாவின் வலது பாரிசத்தில் கர்த்தராக உயர்த்தப்பட்டுள்ளார் (1 கொரி. 15 : 3 -4, 1 பேது. 3 : 22).

இயேசுவாலன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழ் எங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. (அப். 4 : 12).

தேவன் தமது கிருபையால் இலவசமாக மீட்பையும் சமாதானத்தையும் கொடுக்கிறார். இதற்கு தேவை மனமாற்றம் தான், மத மாற்றம் அல்ல.

தேவன் ஒருவர் உண்டென்றும், இயேசு தேவனுடைய குமாரனென்றும் விசுவாசியுங்கள் (எபி. 11:6, யோவா. 20 : 30), பாவங்களுக்காக மனந்திரும்புங்கள் (லூக். 13:3, அப். 2 : 38, 17 : 30). இயேசுவை தேவகுமாரனென்று அறிக்கையிட்டு (ரோ. 0 : 9 -10, அப். 8 : 37. பாவ மன்னிப்பிற்காக திரு முழுக்கு பெற்று இரட்சிக்கப்படுங்கள் (மாற். 16 : 15 -16). கர்த்தர் உங்களை இரட்சித்து தமது சபையில் சேர்த்துக் கொண்டு தூய ஆவியின் வரத்தை கொடுக்கிறார் (மத். 16 : 18, அப். 2:47, ரோ.16 : 16).

## முடிவு

அன்றியும் ஒரு தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபி. - 9 : 27). தேவனை அறியாதவர்களுக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும் படிக்கு கர்த்தராகிய இயேசு மீண்டும் வர இருக்கிறார். அப்போது அவருடையவர்கள் மகிமையும் அவரை ஏற்றுக் கொள்ளாதவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையடைவார்கள் (2 தெச. 1 : 7 -10). கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போகும். பூதங்கள் வெந்து உருகிப் போகும், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போகும் ( 2 பேது. 3 : 10).

அருமை நண்பரே, நீங்கள் ஒருவேளை தெளிவான நோக்கமின்றி வாழ்ந்து கொண்டிருக்கலாம்! உங்கள் வாழ்க்கை பயணம் திசைமாறி போயிருக்கலாம்! எதிர்காலம் இருள் மயமாக தோன்றலாம்! அனைத்தும் இருந்தும் நிம்மதியின்றி வாழ்ந்து கொண்டிருக்கலாம்! ஓயாத போராட்டம், நித்தமும் கண்ணீர், தீராத வியாதி உங்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கலாம்! முதுமையும் தனிமையும் உங்களை வருத்திக் கொண்டிருக்கலாம்.

நாளைக்கு நடப்பது நமக்குத் தெரியாது. நமது வாழ்வு நிலையற்றது. இன்றே இப்பொழுதே ஆண்டவர் இயேசுவுக்கு கீழ்ப்படிந்து பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்றுங்கள். பிறவிப்பயனை அடையுங்கள். இதைச் செய்யாவிட்டால் உங்கள் வாழ்க்கைக்கு எந்த நோக்கமும் நம்பிக்கையும் இல்லை. இப்படிச் செய்ய தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக. நாங்கள் உங்களை மதித்து நேசிக்கிறோம். இயேசுவில் பிறவி பயனை அடையுங்கள். இதற்காக அவர் உங்களை வருந்தி அழைக்கிறார். இதற்காகவே நாம் பிறந்தோம். இதை வாசித்து விட்டு பிறருக்கும் கொடுங்கள். மேலும் விபரம் அறிய அருகிலுள்ள கிறிஸ்துவின் சபையை அணுகுங்கள்.

**. பால்ராஜ்**
**திருச்சி**

## ரெபெக்காள்

முதிர் வயதில் பார்வை இழந்த ஈசாக்கின் மனைவி ரெபெக்காவுக்கு ஏசா, யாக்கோபு என்ற புத்திரர்கள். தான் அதிகமாக நேசிக்கும் இளையகுமாரன் யாக்கோபுவுக்கு தலைச்சன் (சிரேஷ்ட புத்திர) ஆசீரைப் பெற்றுத் தர தாயார் ரெபெக்காள் தீட்டும் ஏமாற்றுத் திட்டத்தில் வீழ்ந்து போகிறார் ஈசாக்.

சகோதரிகளே, நம் குடும்பங்களில் பிள்ளைகள் ஒருவரை ஒருவர் ஏமாற்ற நாம் துணைபோகிறோமா? வேண்டாம் இந்த பிரிவினை வேலை.

## தேவனின் கட்டளைகள் ஐந்து

நீதி.7 : 1 5

1. என் மகனே, நீ என் வார்த்தைகளைக் காத்து, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்து.
2. என் கட்டளைகளையும், என் போதகத்தையும் உன் கண்மணியைப் போல் காத்துக்கொள், அப்பொழுது பிழைப்பாய்.
3. அவைகளை உன் விரல்களில் கட்டி, அவைகளை உன் இருதய பலகையில் எழுதிக்கொள்.
4. இச்சக வார்த்தகளைப் பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கு உன்னை விலக்கி காப்பதற்காக.
5. ஞானத்தை நோக்கி, நீ என் சகோதரி என்றும், புத்தியைப் பார்த்து, நீ என் இனத்தாள் என்றும் சொல்வாயாக.

## நேற்று, இன்று, நாளை

கிறிஸ்து அளித்துள்ள நற்செய்தியின் முக்காலங்களின் அருமையான சுருக்கத்தை, தீத்து 2ம் அதிகாரம் 11 முதல் 13 வசனங்களில் நாம் காண முடிகிறது.

கடந்த காலம் : - " . . . . . எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி" (வ. 11) "கிருபை" என்பது சம்பாதிக்காத ஈவு (தீத்து 3 : 4 -7 வசனங்களைப் பார்க்க). இந்த கிருபை வார்த்தைகளால் மட்டும் வரவில்லை. திரளான மக்கள் கூட்டம் பார்க்கும் படியான ஒரு காரியமாகவும் அது "பிரசன்னமாகியது". இந்தக் கிருபை ஒரு வாக்குத்தத்தம் மட்டுமல்ல, இன்று அது ஒரு சரித்திர உண்மையாகவும் இருக்கிறது. நமது பாவங்களின் பரிகாரமான மரணதண்டனையாக, தனது பாவமற்ற குமாரனை சிலுவையில் எப்போது தேவன் கையளித்தாரோ அப்போதே இந்த கிருபை பிரசன்னமாயிற்று. (யோ. 3 : 16; பிலி. 2 : 5 -11 ; 1 பேதுரு 3 : 18) இயேசு "நம்மை சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார்" (தீத்து 2 : 14) சகல தேசத்திலுள்ள மக்களுக்கும் அவருடைய கிருபை இலவசமாக அளிக்கப்படுகிறது. (மத் 28 : 19 ; மாற்கு 16 : 15 ; 2 பேதுரு 3 : 9, 1 தீமோ 2 : 4) கிருஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படியும் சகலராலும் அவருடைய கிருபை பெறப்படுகிறது. (மாற்கு 16 : 16 ; அப் 2 : 38 - 41; ரோமர் 1 : 16 ; 6 : 3 -4, 17 -18, 23)

நிகழ்காலம் : - "நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி", (வ.12). வேதாகமம் பழைமையானது; ஆனால் இன்றைய உலகில் அதனுடைய செய்தி நமக்கு அவசரத் தேவையானதாக இருக்கிறது. தீங்கான காரியங்களுக்கு விலகி, நம்மையும் பிறரையும் ஆசீர்வதிக்கத்தக்க காரியங்களை நோக்கித் திரும்ப வேண்டுமென இயேசு கிறிஸ்து போதிக்கிறார். (1 பேதுரு 2 : 11 -12, 1 தீமோ 4 : 8 ; தீத்து 2 : 1 - 10 ; 3 : 1 -3 ; 8 : 11 14) தமது செயல்கள் பிறரை எவ்வாறு பாதிக்கும் என்பதையும், எவ்வாறு தேவன் நம்மைப் பற்றி கருதுவார் என்பதையும் நினைத்துப் பார்க்க அவர் நமக்குப் போதிக்கிறார்.

வருங்காலம் : - "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது". பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது". (வ.13) நமக்கு இப்போது நம்பிக்கை உண்டு. (அப். 24 : 15, ரோ. 5 : 4, 1கொரி. 13 : 13, எபே 4:4, எபி. 6 : 19, 1 பேதுரு 3 : 5) ஆனால் நமது நம்பிக்கையின் ஆதாரம்

இயேசு கிறிஸ்துவாயிருக்கிறார். (1 தீமோ. 1 : 1). அவருடைய விசுவாசமுள்ள பரிசுத்தவான்களை தனது வாசஸ்தலத்திற்கு அழைத்துச் செல்ல மீண்டும் அவர் ஒரு நாள் வருவார். (யோ 14 : 1 -3, 1தெசெ 4 : 13- 18, வெளி. 22 : 12) அவர் மீண்டும் வருகையில் ஒவ்வொருவரு அவரைக் காணுவார்கள். ஆனால் விசுவாசமுள்ளவர்கள் மட்டும் அவருடைய மகிமையிலும் பங்கேற்பார்கள். (வெளி 1 : 7, 2 : 10, 1 கொரி 15 : 43, 2 கொரி 4 : 17 கொலோ 1 : 27, 3 : 4, 1 தெசெ 2 : 12, 2 பேதுரு 1 : 3, ரோமர் 8 : 17) நாம் அவரைப் போலயே இருப்போம். (1 யோ 3 : 2) பாவம், மரணம், வருத்தம், துன்பம் அற்ற நித்திய வாழ்வை அனுபவிப்போம். (வெளி 21 : 4, 8. 27) அவரோடு கூட நம்மையும் கிறிஸ்து தனது சிங்காசனத்தில் அமரச் செய்து, ஆட்சி செய்வார். (2 தீமோ 2 : 11 - 13, வெளி 3 : 21, 22 : 5)

தெசலோனிக்கே மக்கள் பலர் "ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்ய, விக்கிரகங்களை விட்டு விலகி தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும், அவர் மரித்தோரிலிருந் தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்க அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதையும் அறிவிக்கிறார்களே" (1 தெசெ 1 : 9 - 10) கிறிஸ்துவின் முதல் வருகையில், தேவனின் கிருபை பிரசன்னமாயிற்று. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், தேவனின் மகிமை பிரசன்னமாகும்! நீங்கள் தயாரா? கிறிஸ்து மீண்டும் வருவதை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறீர்களா?

**ராய்ஸ் ப்ரெடரிக்.**

## பிரிவினை பாவம்

**பிரிவினை பாவமாகும். கலா 5 : 20; I கொரி 1 : 10 - 17 புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள திட்டத்தின் படி இல்லாத ஒரு திருசபையை ஏற்படுத்துவதோ, அதற்கு உதவி செய்வதோ பாவமாகும். இவ்வாறு தனிமனிதர் செய்தாலும் அல்லது பலர் கூட்டமாக சேர்ந்து செய்தாலும் பாவமாகும். புதிய ஏற்பாட்டை கவனமாய் வாசி. அதில் திருசபையைக் கட்டுவதற்கும், நடத்துவதற்கும் உரிய திட்டம் முழுமையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது விஷயத்தில் மாந்த அறிவை நாடுவது அறியாமை.**

YOUR ATTENTION PLEASE

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH**

The voice of Truth-Speaker: J.C. Choate,
The Voice of Truth, Post Box 3815, New Delhi-110 049
Fridays - 7:45 to 8:00 P.M.

**HINDI**

Satya Susamachar-Speaker: Sunny David.
Satya Susamachar, Post Box 3815, New Delhi-110 004
Tuesdays - 9:00 to 9:15 P.M.
Fridays - 9:00 to 9:15

**TELUGU**

The Voice of Truth-Speaker; Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinda 533 001
Tuesdays - 2:00 to 2:15 P.M.
Thursdays - 2:15 to 2:30 P.M.
Fridays- 2:15 to 2:30 P.M.

**TAMIL**

The Way of Truth-Speaker: P.R. Swamy.
The Way of Truth, Post Box 8405, Bangalore 560 084
Sundays - 6:45 to 7:00 P.M.
Thursdays - 6:45 to 7:00 P.M.

**MALAYALAM**

The Voice of Truth-Speaker: P.K. Varghese
Church of Christ, Sunny Meads Lane, Trivandrum-34 (Kerala)
Fridays - 3:15 to 3:30 P.M.

**KANNADA**

The Voice of Truth-Speaker: Robert Rathnakar
Box 448, Bangalore 560 004
Sundays - 1:45 to 2:00

**ALL ARE ENCOURAGED TO LISTEN**

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the address listed. Also the radio sermons are available in book form.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted at Erode HPO on 20, June 1994
JUNE 1994, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 MM, ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க

**E.Z.S. ராஜநாயகம்**

கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு.

காங்கயம் 638 701

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER

BOOK - POST